
தினகனி
செய்திகள் மற்றும்விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




| Vol: 02 | Issue: 148 | 4 Pages | 26.12.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 148 | 4 பக்கங்கள் | 26.12.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை**

**விளக்கம்:** வாழ்க்கையின் தன்மையைக்கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலைசெய்வதற்க்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை மத்திய மந்திரிக்கு முதல்அமைச்சர் கடிதம்

சென்னை, டிச.26

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில்,

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் இரண்டு இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளுடன் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் 24.12.2024 அன்று சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் . 20.12.2024 அன்று இலங்கையைச் சேர்ந்த அடையாளம் தெரியாத ஆறு நபர்களால், நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரை கிராமத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த மூர்க்கத்தனமான தாக்குதலில், இரண்டு நாட்டுப் படகுகளில்பயணித்தஆறுமீனவர்களில், மூன்று மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தத் தாக்குதலின் போது, மீனவர்களது மீன்பிடிப் படகுகளில் இருந்த GPS கருவிகள், VHF கருவிகள், மீன்பிடி வலை, கையடக்கத் தொலைபேசி மற்றும் அவர்கள் பிடித்த மீன்களும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது .




இதுபோன்று அடிக்கடி நடக்கும் கைது மற்றும் தாக்குதல் சம்பவங்கள், பாரம்பரிய கடற்பரப்பில் மீன்பிடிக்கும் தொழிலை மட்டுமே நம்பியிருக்கும் மீனவர்களின் வாழ்க்கையில் நிச்சயமற்ற தன்மையையும், ஆபத்தை ஏற்படுத்துகிறது .

2024 ஆம் ஆண்டில் மட்டும் 530 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, 71 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், அண்மைக்காலமாக நடைபெற்று வரும் இத்தகைய சம்பவங்களும், தாக்குதல்களும் மீன்பிடித் தொழிலை மட்டுமே நம்பி வாழும் மீனவ மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது .

எனவே, இலங்கைக்கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கவும், எதிர்காலத்தில் தமிழக மீனவர்கள் மீது இதுபோன்ற தாக்குதல்கள் நடைபெறாமல் இருக்கவும் உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் .என தெரிவித்துள்ளார் .

## ஆப்கானிஸ்தானில் நள்ளிரவில் தொடர் வான்வழி தாக்குதல்; 15 பேர் பலி



காபூல், டிச.26

ஆப்கானிஸ்தான் நாட்டின் பக்திகா மாகாணத்தில் பர்மால் மாவட்டத்தில் நேற்று நள்ளிரவு பாகிஸ்தானில் இருந்து தொடர்ச்சியாக வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்பட 15 பேர் பலியாகி உள்ளனர்.

இதில்,பலிஎண்ணிக்கைஅதிகரிக்ககூடும்என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. இந்த தாக்குதலில் 7 கிராமங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதில், ஒரே குடும்பத்தின் 5 உறுப்பினர்கள் உயிரிழந்து உள்ளனர்.

பாகிஸ்தானில்இருந்துஜெட்விமானங்கள்குண்டுமழைபொழிந்துள்ளது என உள்ளூர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று தலீபான்களின் பாதுகாப்பு அமைச்சகம் சூளுரைத்து உள்ளது. நிலம் மற்றும் இறையாண்மையை பாதுகாப்பது என்பது தங்களுடைய சட்ட உரிமை என அமைச்சகம் குறிப்பிட்டு உள்ளது.

# கோவை லாட்டரி வியாபாரியிடம் ரூ.2.25 கோடி சிக்கியது

கோவை, டிச. 26

கோவையைச் சேர்ந்த லாட்டரி வியாபாரியிடம் 2.25 கோடி ரூபாயை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி, பாலாஜி நகரின் சென்னியாண்டவர் கோவில் தெருவைச் சேர்ந்தவர் நாகராஜ்(42). திருமணமாகவில்லை. தாயாருடன் வசித்து இவர், கேரளாவில் லாட்டரிக் கடையில் காசாளராக பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கோவையில் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனைசெய்பவர்களைபிடிக்கும்படி மாவட்ட எஸ்.பி., கார்த்திகேயன் உத்தரவிட்டார். இதற்காக எட்டு தனிப்படைகள் அமைக்கப்பட்டன. இதனடிப்படையில், பொள்ளாச்சி,வால்பாறை, அன்னூர் மற்றும் கருமத்தம்பட்டி உள்ளிட்ட 30 இடங்களில் சோதனை நடத்தினர்.

இச்சோதனையில், ரூ.2.5 கோடி ரொக்கம், தடை செய்யப்பட்டகேரள லாட்டரிகள் 1,900 பறிமுதல் செய்யப்பட்டன.




ரொக்கப்பணத்தில் ரூ.2 லட்சம் அளவுக்கு 2 ஆயிரம் நோட்டுக் கட்டுகள் இருந்தன. இதனையடுத்து நாகராஜை போலீசார் கைது செய்தனர்.நாகராஜிடம் நடத்திய விசாரணையில், லாட்டரிக்கடையில் காசாளராக பணியாற்றுவதுடன் இல்லாமல், கோவை மற்றும் திருப்பூரில் தடை செய்யப்பட்ட லாட்டரிகளை அவர் விற்பனை செய்தது தெரியவந்தது. மேலும் அவிநாசி மற்றும் கருமத்தம்பட்டி போலீஸ் ஸ்டேசனில் தலா 3 வழக்குகள் அவர் மீது நிலுவையில் உள்ளது.

## உலக புகழ்பெற்ற ஈபிள் டவரில் தீ விபத்து



பாரிஸ், டிச.26

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உலக புகழ்பெற்ற ஈபிள் டவர் உள்ளது. கிறிஸ்துமஸ் தினம் நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில் ஈபிள் டவர் பகுதியில் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவிந்துள்ளனர்.

இந்நிலையில், ஈபிள் டவரில் இன்று திடீரென தீ விபத்து ஏற்பட்டது. ஈபிள் டவரில் உள்ள லிப்ட்டில் தீ விபத்து ஏற்பட்டது. முதல் தளத்திற்கும் 2வது தளத்திற்கும் இடையே லிப்ட்டில் தீ விபத்து ஏற்பட்டது.

இதையடுத்து, விரைந்து வந்த தீயணைப்பு, மீட்புப்படையினர் தீயை அணைத்தனர். இந்த தீ விபத்து காரணமாக ஈபிள் டவர் பகுதியில் குவிந்திருந்த 12 ஆயிரம் சுற்றுலா பயணிகள் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட்டனர். மேலும், ஈபிள் டவர் பகுதியில் சுற்றுலா பயணிகளுக்கு தற்காலிக தடை விதிக்கபட்டுள்ளது.

கிறிஸ்துமஸ் பண்டிகையையொட்டி ஈபிள்டவர்பகுதியில் குவிந்திருந்த சுற்றுலா பயணிகள் தீ விபத்தால் கவலையடைந்துள்ளனர்.

# போதையில்லாத தமிழ்நாடு என்ற தலைப்பில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்: அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்

சென்னை, டிச.26

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்குவது குறித்து பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறார். போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் காணொலி காட்சி மூலம் விழிப்புணர்வுப் பிரசாரங்கள், கல்லூரிகளில் சிறப்பு குழுக்கள் அமைத்தல் ஆகியவற்றை மேற்கொண்டு வருகின்றார்.

இந்ததீவிரசெயல்திட்டங்களுக்கு பொதுமக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே மிகுந்த வரவேற்பையும் மாற்றத்தையும் உருவாக்கியுள்ளது. மேலும், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையம் மூலம் போதையில்லாத தமிழ்நாட்டை உருவாக்குவது



குறித்து ரீல்ஸ், போஸ்டர் டிசைன், மீம்ஸ் மற்றும் ஓவியம் ஆகிய பிரிவுகளில் விழிப்புணர்வுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

அதன் அடிப்படையில், ரீல்ஸ் பிரிவில் 384 படைப்புகளும், போஸ்டர் டிசைன் பிரிவில் 1246 படைப்புகளும், மீம்ஸ் பிரிவில் 1273 படைப்புகளும், ஓவியப் பிரிவில் 1031 படைப்புகளும் என மொத்தம் 3934 படைப்புகள் மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டன. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நேற்று சென்னைகலைவாணர்அரங்கத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் ஊடக மையம் மூலம் "போதையில்லாத தமிழ்நாடு" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட ரீல்ஸ், போஸ்டர் டிசைன், மீம்ஸ் மற்றும் ஓவியம் ஆகிய பிரிவுகளில் இருந்து சிறப்பான படைப்புகள் தேர்வு செய்யப்பட்ட 15 நபர்களுக்கு நினைவு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் இரா. வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர் எஸ்.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மற்றும் ஊடக மைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## மத்திய தரைக்கடலில் மூழ்கிய ரஷிய கப்பல் 14 மாலுமிகள் உயிருடன் மீட்பு



மாஸ்கோ, டிச.26


ரஷியாவின் ஜெயின் பீட்டர்ஸ் பெர்க் நகரில் இந்து கடந்த 12ம் தேதி விளாடிவொஸ்டோக் நகரில் உள்ள துறைமுகத்திற்கு சரக்கு கப்பல் புறப்பட்டது. அந்த கப்பலில் 16 மாலுமிகள் பயணித்தனர்.

இந்நிலையில், கடந்த 22ம் தேதி மத்திய தரைக்கடல் வழியாக கடல் வழியாக கப்பல் சென்றுகொண்டிருந்தது. ஸ்பெயினின் அகுலியாஸ், அல்ஜீரியாவின் ஓரன் நகர்களுக்கு அருகே சர்வதேச கடல்பரப்பில் மத்திய தரைக்கடலில் சென்றுகொண்டிருந்தபோது கப்பலின் எஞ்சின் அறையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தீ மளமளவெனகப்பலின் பிற பகுதிகளுக்கும் பரவியது. இந்ததீ விபத்து குறித்து தகவலறிந்த ஸ்பெயின் கடற்படையினர் மற்றும் அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த பிற கப்பல்கள் மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இதில் ரஷிய கப்பலில் இருந்து 14 மாலுமிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். அதேவேளை, 2 மாலுமிகள் கடலில் விழுந்த நிலையில் அவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மீட்கப்பட்ட மாலுமிகள் ஸ்பெயினின் கார்டகினா நகருக்கு அழைத்து செல்லப்பட்டனர். அங்கிருந்து அவர்கள் ரஷியாவுக்கு திரும்பி அனுப்பப்பட உள்ளனர். அதேவேளை, தீப்பற்றிய சரக்கு கப்பல் கடலில் மூழ்கியது.

# விண்வெளியில் விண்கலன்களை ஒன்றிணைக்கும் முக்கிய திட்டம்; ஸ்பேட்எக்ஸ் திட்டத்திற்கான ராக்கெட் டிச.30ம் தேதி ஏவப்படும்



சென்னை, டிச.26

விண்வெளியில் விண்கலன்களை ஒன்றிணைக்கும் முக்கிய திட்டமான ஸ்பேட்எக்ஸ் திட்டத்திற்கான ராக்கெட் ஏவுதல் வரும் டிச.30ம் தேதி செயல்படுத்தப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ பல்வேறு விண்வெளி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது, கடந்த ஆண்டு சந்திரயான் 3, ஆதித்யா எல்1 ஆகிய திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி உலகை திரும்பி பார்க்க வைத்தது. வணிக ரீதியாகவும் வெளிநாட்டு செயற்கைக் கோள்களை விண்ணில் நிலைநிறுத்தியதன் மூலம், உலக சந்தையில் முன்னணி அமைப்பாக திகழ்கிறது. மேலும் தனது கனவு திட்டமான மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்த இஸ்ரோ தீவிரமாக பணியாற்றி வருகிறது. இதன் அடுத்தபடியாக 2035ம் ஆண்டுக்குள் விண்வெளியில் இந்திய ஆய்வு மையத்தையும் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான முன் தயாரிப்பு திட்டமாக ஸ்பேட்எக்ஸ் எனும் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட உள்ளது. இந்த திட்டத்தில் ஸ்பேஸ் டாக்கிங் எனப்படும் விண்வெளியில் விண்கலன்களை ஒருங்கிணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்தனர். இந்த ஸ்பேட்எக்ஸ் திட்டத்திற்கான ராக்கெட் ஏவுதல் வரும் டிச.30ம் தேதி நடைபெறுவுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது. இது குறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறியதாவது: பிஎஸ்எல்வி சி 60 ராக்கெட் மூலம்தலா220கிலோஎடைகொண்ட 2 சிறிய விண்க லன்கள் ஏவப்படவுள்ளன. இந்த விண்க லன்கள் புவியில் இருந்துசுமார்470கி.மீதூரம்கொண்ட வெவ்வேறு சுற்றுப்பா தை களில் நிலைநிறுத்தப்பட உள்ளன. அதன்பின் அவற்றை ஒன்றிணைக்கும் பணிகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும். இந்த பணிகள் மொத்தம் 66 நாட்கள் நடைபெறும். நிலவில் இருந்து மாதிரி எடுத்து திரும்புதல், இந்தியாவின் விண்வெளி மையம் உருவாக்குதல் மற்றும் இயக்கம் போன்ற இந்தியாவின் விண்வெளி லட்சியங்களுக்கு இந்தத் தொழி ல்நுட்பம் அவசியம். ஒரே குறிக்கோளை கொண்டு விண்ணில் செலுத்தப்படும் பல ராக்கெட் திட்டங்களை ஒருங்கிணைக்க இதுஉதவும். ராக்கெட் பாகங்கள் ஒருங்கிணைப்பு பணிகள் முடிக்கப்பட்டு, விண்கலன்களை பொரு த்துதல் உள்ளிட்ட பணிகளுக்காக ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதல் ஏவுதளத்திற்கு ராக்கெட் கொண்டு வரப்பட்டுள்ளது. திட்ட ஆய்வுக் குழுவின் ஒப்புதல் கிடைத்தவுடன் ஏவுதலுக்கான செயல்பாடுகள் தொடங்கும். இந்த திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்துவதன் மூலம், ஸ்பேஸ் டாக்கிங் தொழில்நுட்பத்தைக் கொண்ட 4வது நாடாக இந்தியா முன்னேறும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## 3 குழந்தைகளை பறி கொடுத்த ஒரு வாரத்தில் கர்ப்பிணி பலி; காஷ்மீரில் சோகம்

ரஜோரி, டிச.26

ஜம்மு மற்றும் காஷ்மீரின் ரஜோரி மாவட்டத்தில் பதால் கொத்ரன்கா பகுதியை சேர்ந்தவர் ரஜிம் அக்தர் (வயது 35). 5 மாத கர்ப்பிணியான இவர் உடல்நல பாதிப்புக்காக சிகிச்சை பெறுவதற்காக, முதலில் கண்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதன்பின்னர், ரஜோரியில் உள்ள அரசு மருத்துவ கல்லூரியில் உறவினர்கள் அவரை சேர்த்தனர்.

இந்நிலையில், கர்ப்பிணியான அக்தர் சிகிச்சை பலனின்றி பலியானார். இந்தசம்பவத்தில்தொடர்புடைய5டாக்டர்கள்சஸ்பெண்டுசெய்யப்பட்டு உள்ளனர். இதுதவிர, துணை மருத்துவர்கள் உள்ளிட்ட பிற பணியாளர்கள் 10 பேருக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது. 5 டாக்டர்களும் அவசர வார்டில் இரவு பணியில் இருந்துள்ளனர்.

அந்த பெண் உயிரிழப்பதற்கு முன் கடந்த வாரம் மர்ம பாதிப்புகளால் அவருடைய 3 குழந்தைகள் உயிரிழந்து விட்டனர். இந்த சோகத்தில் இருந்து வெளியே வருவதற்குள் அவர் உயிரிழந்து விட்டார்.

தினகனி


# நடத்தையில் சந்தேகம்: கணவரை கத்தியால் குத்திய மனைவி கைது

தென்காசி, டிச.26

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் கிளாவடி விநாயகர் கோவில் தெருவை சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி மகன் மாரியப்பன். இவருடைய மனைவி கோகிலா. மாரியப்பன் தென்காசியில் ஸ்வீட்ஸ் கடை நடத்தி வருகிறார். இவர்களுக்கு 13 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. 4ம் வகுப்பு படிக்கும் மகள் உள்ளார். மாரியப்பன் மீது அவரது மனைவி கோகிலா நடத்தையில் சந்தேகப்பட்டு உள்ளார். இதனால் கணவன் மனைவி இடையே அடிக்கடி தகராறு இருந்து வந்தது. இதே போல் நேற்று முன்தினம் மாலையும் தகராறு ஏற்பட்டது. அப்போது கோகிலா, மாரியப்பனின் முதுகில் கத்தியால் குத்தியுள்ளார். இதில் காயம் அடைந்த மாரியப்பன் சங்கரன்கோவில் அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். இதுகுறித்து சங்கரன்கோவில் டவுண் போலீசார் வழக்குப்பதிவு செய்து கோகிலாவை கைது செய்தனர். நடத்தையில் சந்தேகப்பட்டு கணவனை மனைவி கத்தியால் குத்திய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திராவிட மாடல் குறித்து கேலி செய்பவர்களுக்கு பெரியாரின் கைத்தடி ஒன்றே போதும்: மு.க.ஸ்டாலின்

சென்னை, டிச.26

தந்தை பெரியாரின் 51ம் ஆண்டு நினைவு நாளையொட்டி, சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் திடலில் புதிதாக கட்டப்பட்டுள்ள பெரியார் பகுத்தறிவு எணினி நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

அதன்பின்னர் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

பெரியாரின் கைத்தடியை தி.க. தலைவர் கி.வீரமணி வழங்கிய போது என்னையே நான் மறந்து விட்டேன். வாழ்க்கையில் எத்தனையோ பரிசுகளை பெற்று இருக்கிறேன்; ஆனால் இந்த பரிசுக்கு எதுவும் ஈடாகாது. போதும்..... எனக்கு இது போதும். திராவிட மாடல் என்றால் என்ன என கேலி செய்பவர்களுக்கு பெரியாரின் கைத்தடி ஒன்றே போதும். பெரியார் நினைவிடத்திற்கு வந்ததை தாய் வீட்டிற்கு வந்தது போல் உணர்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் பெரியார். தமிழினம் சுயமரியாதை பெற வாழ்நாளெல்லாம் உழைத்தவர் தந்தை பெரியார். ஊருக்குள் வர தடை, கோவிலுக்குள் வர தடை, போராட தடை என அனைத்தையும் உடைத்தவர் பெரியார். அத்தனை தடைகளையும் உடைத்தெறிந்தவர், அனைவரின் மனதுக்குள் இடம்பிடித்திருப்பவர் பெரியார். பெரியார் பயணத்தை நாம் தொடர்வோம் என கருணாநிதி சொன்னார். மறைந்து 51 ஆண்டுகளுக்கு பின்னரும் பெரியார் பேசப்படுகிறார்.

பெரியாரிடம் கற்றறிந்த பாடத்தை தி.க. தலைவர் கி.வீரமணி வெளிப்படுத்தி கொண்டிருக்கிறார். பெரியாரின் கருத்துகளை அனைத்து மக்களிடம் கொண்டு சேர்த்து வருபவர் கி.வீரமணி. பெரியாரை உலகமயமாக்கி உலகின் சொத்தாக மாற்றி இருக்கிறோம். பெரியாரின் டிஜிட்டல் நூலகம் எல்லா வகையிலும் அனைவருக்கும் பயன்தரும். வைக்கத்தில் பெரியார் நினைவகம், நூலகமும் திறந்து வைத்து இளைய சமுதாயத்திற்கு பெரியாரை கொண்டு சென்றோம். இவ்வாறு அவர் பேசினார்.

# வன்னியர் உள்ஒதுக்கீடு: தமிழக அரசைக் கண்டித்து பாமக ஆர்ப்பாட்டம்



சென்னை, டிச.26


வன்னியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், வட்டத் தலைநகரங்களிலும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இன்று (24ம் தேதி) மாபெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் கடந்த சில நாட்களுக்கு முன் அறிவித்தார்.

அதன்படி, வன்னியர் உள் ஒதுக்கீடு விவகாரத்தில் தமிழக அரசைக் கண்டித்து தமிழகத்தின் பல்வேறு இடங்களில் பாமக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. விழுப்புரம் ஆட்சியர் அலுவலகம் எதிரே பாமக தொண்டர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதில் அக்கட்சியின் நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கலந்து கொண்டுள்ளார். இந்த ஆர்ப்பாட்டத்தால் விழுப்புரம் சென்னை நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரத்தில் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தலைமையில் கலெக்டர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் நடைபெற்று வருகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர். தமிழக அரசுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதைபோல சென்னை, கடலூர் உள்ளிட்ட இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

ஆர்ப்பாட்டத்தில் அன்புமணி ராமதாஸ் பேசுகையில், "வன்னியர் உள்ஒதுக்கீடு விவகாரத்தில் சுப்ரீம் கோர்ட்டு தெளிவான உத்தரவை வழங்கியுள்ளது. வன்னியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படும் என முதல்அமைச்சர் ஏற்கனவே உறுதியளித்தார். அதிகாரம் இருந்தும் கொடுக்க மனம் இல்லாத திராவிட மாடல் திமுக அரசு. வன்னியர்களின் சமூக பின்தங்கிய நிலை குறித்த தரவுகளை சேகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பை மத்திய அரசு தான் நடத்த வேண்டும் என முதல்வர் தற்போது சொல்கிறார்" என்று கூறினார்.

# புதுப்பேட்டை அருகே கேமரா பொருத்தப்பட்ட கழுகால் பரபரப்பு போலீசார் விசாரணை



பண்ருட்டி, டிச.26


பண்ருட்டி அருகே சித்திரை சாவடி கிராமத்திற்கு இன்றுகாலைகழுகு ஒன்று பறந்து வந்தது. அது அந்த பகுதியில் இருந்த காமன் கோவில் மேலே பறந்து வந்து அங்கு அமர்ந்தது

அந்தக் கழுகின் முதுகு பகுதி முன்பகுதிகளில் கேமரா பொருத்தப்பட்டிருந்தது. இதனை கண்ட கிராம மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்த செய்தியை காட்டு தீப்போல கிராமத்துக்குள் பரவியது. அங்கு பொது மக்கள் திரண்டனர்.

இது குறித்து புதுப்பேட்டை காவல் நிலையத்துக்கு தகவல் தெரிவித்தனர். புதுப்பேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் அசோகன் மற்றும் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று கழுகு எங்கிருந்து வந்தது. யார் அனுப்பினார்கள் அதில் உள்ள கேமராக்கள் எத்தகைய செயலுக்காக அனுப்பப்பட்டது என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இதனால் அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது.

# சிறுமிக்கு பாலியல் சீண்டல் உதவி ஜெயிலரை செருப்பால் அடித்த இளம்பெண் மீதும் போலீசார் வழக்கு





மதுரை, டிச.26

மதுரை மத்திய சிறையில் இருந்து வெளியே வந்த முன்னாள் கைதி ஒருவர் மதுரை ஆரப்பாளையம் பைபாஸ் சாலையில் ஓட்டல் நடத்தி வருகிறார். சிறையில் இருந்தபோது அவருடன் ஏற்பட்ட பழக்கம் காரணமாக அந்த ஓட்டலுக்கு உதவி ஜெயிலர் பாலகுருசாமி அடிக்கடி சாப்பிட சென்றுள்ளார்.

அவரது குடும்ப உறுப்பினர்களுடன் நட்பாக பழகிய அவர், ஓட்டல் உரிமையாளரின் திருமணமாகாத மகள் மற்றும் 14 வயது பேத்தி ஆகியோரின் செல்போன் எண்ணை பெற்றுக் கொண்டு தொடர்ந்து தொல்லை அளித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு சிறுமியை ஞானஒளிவுபுரம் ஏ.டி.எம். மையம் அருகே தனியாக வருமாறு பாலகுருசாமி அழைத்திருந்தார். இத்தகவலை சிறுமி தன் தாத்தா, பாட்டி, சித்தியிடம் கூறவே, அவர் கூப்பிட்ட இடத்துக்கு இருவரும் உடன் சென்றனர். அங்கு வந்த பாலகுருசாமி சிறுமியிடம் பாலியல் சீண்டலிலும் ஈடுபட்டுள்ளார்.

இதைப்பார்த்து அதிர்ச்சி அடைந்த சிறுமியின் சித்தி, பொதுமக்கள் நடமாட்டம் மிகுந்த அந்த சாலையில் பாலகுருசாமியை கடுமையாக திட்டியவாறு கைகளாலும், காலில் அணிந்திருந்த காலணியை கழற்றி சரமாரியாக தாக்கினார். இதை சிலர் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பரப்பினர்.

இதனை பார்த்தும், பகிர்ந்தும் தங்களது எதிர்ப்பை தெரிவித்த பலர் பெண்ணுரிமையை காக்கும் லட்சணம் இது தானா..., என்பது உள்ளிட்ட பல்வேறு விமர்சனங்களை பதிவிட்டனர்.

இதைத்தொடர்ந்து உதவி ஜெயிலர் பாலகுருசாமியை சிறைத்துறை டி.ஐ.ஜி. பழனி சஸ்பெண்ட் செய்து உத்தரவிட்டார். அச்சிறுமியின் உறவினர்கள் கொடுத்த புகாரின் பேரில், விசாரணை நடத்திய அனைத்து மகளிர் போலீசார் பாலகுருசாமியை போக்சோ சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இதற்கிடையே உதவி ஜெயிலரை பொது இடத்தில் பலரது முன்னிலையில் தாக்கியதாக முன்னாள் சிறை கைதி, அவரது மகள் ஆகியோர் மீது கரிமேடு போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். அதாவது இந்திய தண்டனை சட்டம் 323 (தானாக முன்வந்து காயத்தை ஏற்படுத்துதல்) மற்றும் 355 (ஒருவரை அவமதிக்கும் வகையில் தாக்குதல்) ஆகிய பிரிவுகளின் கீழ் தந்தை, மகள் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# அலங்காநல்லூர்: கிரிக்கெட் போட்டியில் திண்டுக்கல் நத்தம் அணி முதலிடம் பிடித்தது; மதுரை அணி வி.புதூர் 2-ம் இடம் பிடித்தது



அலங்காநல்லூர், டிச. 26

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட குறவன் குளத்தில் 21.12.2024, 22.12.2024 ஆகிய தேதிகளில் பிரேம் நண்பர்கள் மற்றும் நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளைஇணைந்து முதலாம் ஆண்டு கிரிக்கெட் போட்டி நடத்தியது. இந்த போட்டியை வி. ஆனந்த் (தி.மு.க. கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சின்னஊர்சேரி) தொடங்கி வைத்தார். முதல் பரிசை திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அரசி அணியினருக்கு ரூ.15,000 ரொக்க தொகையை நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிறுவனர் டி.குருசாமி சார்பாக நவீன் பரிசு மற்றும் கோப்பை வழங்கினார். 2–ம் பரிசை மதுரை வி.புதூர் பிடாரி அம்மன் கிரிக்கெட் கிளப்பிற்கு ரூ.10,000 ரொக்க பரிசை குறவன்குளம் எஸ்.பால்ச்சாமி – லெட்சுமி, வே.லெனின்பிரபு (தமிழ்நாடு காவல் துறை), வே.ஸ்டாலின்பிரபு(இந்திய ராணுவம்) ஆகியோர் வழங்கினர்.

3–ம் பரிசை மதுரை பிரண்ட்ஸ் கிளப் அணியினருக்கு ரூ.8,000 ரொக்க தொகையை ஏ.அப்பாஸ் மந்திரி அய்யூர் எம்.ஏ.பிரிக்ஸ், பாலமேடு வழங்கினார். 4–ம் பரிசை குறவன்குளம் பிரேம் நண்பர்கள் அணியினருக்கு ரூ.6,000–த்தை பி.எம். எஸ்.சரவணன் (புதிய தமிழகம் கட்சி மாவட்ட இளைஞரணி செயலாளர், அய்யூர்) வழங்கினார். 5–ம் பரிசை மதுரை மாவட்டம் வெளிச்சநத்தம் அணியினருக்கு ரூ.4,000–த்தை அலங்காநல்லூர் பொன். குமார் வழங்கினார். அனைத்து போட்டிகளுக்கும் கப் மற்றும் மெடல்களை நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிறுவனர் டி.குருசாமி வழங்கினார். சிறப்பு நன்கொடையாளர்கள் ஏ.முகமது அலி ஜின்னா (ஆசிரியர்–சட்டகளம் நாளிதழ் நிறுவனர் – தங்கம்மாள் ரஹீம் அறக்கட்டளை, வாசன் (அலங்காநல்லூர் தி.மு.க. 3–வது வார்டு கவுன்சிலர், குறவன்குளம்), கதிர், பொன் ராஜ் (கீழச்சின்னணம்பட்டி), சிறந்த ஆட்ட நாயகன் பரிசை டி.செல்வம் (தமிழ்நாடு காவல்துறை, தண்டலை) ஆகியோர் வழங்கினார்கள். விளையாட்டுவீரர்களுக்கு பனியன் அன்பளிப்பாக நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை நிறுவனர் டி.குருசாமி மற்றும் நாகா (கல்லணை) ஆகியோர் வழங்கினார்கள். விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்ட வீரர்களுக்கு மதிய உணவு நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை சார்பாக வழங்கப்பட்டது. முடிவில் சி.ராமச்சந்திரன் உடற்கல்வி ஆசிரியர் நன்றி உரை ஆற்றினார். சிறப்பு அழைப்பாளராக ரெட்கிராஸ் செயலாளர் ராஜ்குமார், சமூக சேவகர் ராஜ்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்த போட்டியை சிறப்பாக விழா கமிட்டியாளர்கள் செய்து இருந்தனர்.

# அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்து டிரைவர் தற்கொலை

நெல்லை, டிச.26

நெல்லை அருகே உள்ள முன்னீர்பள்ளம் மருதம்நகர் ரெயில்வே தண்டவாளத்தில் நேற்று அதிகாலை ஆண் ஒருவரின் உடல் கிடந்தது. நாகர்கோவில் ரெயில்வே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்து விசாரணை நடத்தினர்.

முதற்கட்ட விசாரணையில் பிணமாக கிடந்தவர் முன்னீர்பள்ளம் மருதம்நகரை சேர்ந்த ஜெயசீலன் (வயது 59) என்பது தெரியவந்தது. லாரி டிரைவரான இவர் வெளிநாட்டில் வேலை பார்த்து வந்தார். இவரது 2வது மகன் சதீஷ். இவர் பாளையங்கோட்டையில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளியில் பிளஸ்1 படித்து வந்தார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் மருதம்நகர் ரெயில்வே தண்டவாளம் பகுதியில் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் சொந்த ஊருக்கு வந்த ஜெயசீலன் தனது மகன் உயிர்இழந்ததை நினைத்து தினமும் மனமுடைந்து காணப்பட்டார்.

மருதம்நகர் ரெயில்வே தண்டவாளத்திற்கு அருகே உள்ள தோட்டத்திற்கு செல்வதாக கூறி விட்டு வெளியே வந்த அவர் அந்த வழியாக சென்னையில் இருந்து நெல்லை வழியாக கொல்லம் செல்லும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். அவரது மகன் தற்கொலை செய்த அதே இடத்தில் உயிரை மாய்த்தது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.



கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு, எபிரோன் ஏ.ஜி ஜெப வீடில் சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் ஊடக கனி நல சங்கத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றதுடன், சங்க உறுப்பினர்களின் ஒற்றுமையும் சமூகத்தில் நலவாழ்வை வளர்க்கும் உறுதிச் செயல்பாடுகளும் வெளிப்பட்டன. நிகழ்ச்சியின் முக்கிய பகுதிகளாக கிறிஸ்மஸ் பாடல்கள், சிறப்பு பிரார்த்தனை, மற்றும் அன்பு விருந்து ஆகியவை இடம்பெற்றன.

# ராமேஸ்வரம்: தனியார் உடை மாற்றும் அறையில் ரகசிய கேமரா: வீடியோ எடுத்த 2 பேர் கைது



ராமேஸ்வரம், டிச.26

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் பகுதியில் இருந்து நேற்று ஒரே குடும்பத்தை சேர்ந்த 10 பேர், ராமேஸ்வரம் கோவிலுக்கு வந்திருந்தனர். அவர்கள் அக்னி தீர்த்த கடலில் நீராடிய பின்னர், கடற்கரை எதிரே உள்ள தனியாருக்கு சொந்தமான டீக்கடையுடன் கூடிய உடை மாற்றும் அறையில் துணி மாற்றுவதற்காக கட்டணம் எடுத்துள்ளனர்.

அப்போது, அறைக்குள் ரகசிய கேமரா இருந்ததை, இளம்பெண் ஒருவர் கண்டுபிடித்து தனது தந்தையிடம் கூறினார். இதுகுறித்து போலீசாரிடம் அவர் புகார் அளித்தார். இதனைத்தொடர்ந்து ராமேஸ்வரம்கோவில் போலீசார் வழக்கு பதிந்து, அங்கு வேலை செய்த ஊழியர்களான ராமேஸ்வரம் தம்பியான் கொல்லையை சேர்ந்த ராஜேஷ் கண்ணன்( 34) ரெயில்வேபீடர்ரோட்டை சேர்ந்த மீரான் மைதீன்( 38) ஆகியோரை கைது செய்தனர்.

அங்குள்ள உடை மாற்றும் அறையில் பல மாதங்களாக ரகசிய கேமரா வைத்து, பெண்கள் உடை மாற்றுவதை வீடியோ எடுத்து, இவர்கள் இருவரும் மொபைல் போனில் பார்த்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இதையடுத்து, இருவரையும் போலீசார் தீவிரமாக விசாரிக்க துவங்கி உள்ளனர்.

நிறைய பெண்களை இவர்கள் படம் பிடித்து உள்ளதால் அது தொடர்பான வீடியோக்களை வைத்து யாரையும் மிரட்டினார்களா அல்லது வலைத்தளங்களிலோ, வேறு யாருக்கும் பகிர்ந்தார்களா? என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. உடை மாற்றும் அறையில் கேமரா வைத்து பெண்களை படம் பிடித்த விவகாரம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# திருப்பூர்: வாட்ஸ்அப் குறுஞ்செய்தி மூலம் நிறுவன உரிமையாளரிடம் ரூ.7.47 லட்சம் மோசடி



திருப்பூர், டிச.26

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே நிதி நிறுவனம் நடத்தி வருபவர் தங்கராஜ். இவரது செல்போனுக்கு கடந்த 8ந்தேதி, ஒரு புதிய எண்ணில் இருந்து குறுஞ்செய்தி வந்துள்ளது. அந்த எண்ணில் தங்கராஜ் வங்கி கணக்கு வைத்துள்ள வங்கியின் லோகோ, பெயர் ஆகியவை இருந்ததாக கூறப்படுகிறது.

மேலும் அந்த குறுஞ்செய்தியில், உங்களது வங்கி கணக்கில் KYC அப்டேட் செய்வதற்கு இன்று தான் கடைசி நாள் எனவும், அப்டேட் செய்யாவிட்டால் உங்கள் வங்கி கணக்கு முடக்கப்படும் எனவும் கூறி, கீழே உள்ள லிங்க் மூலம் விவரங்களை பதிவு செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து வங்கியில் இருந்துதான் குறுஞ்செய்தி வந்துள்ளது என நம்பி வாட்ஸ்அப்பில் வந்த லிங்க் உள்ளே சென்று, தனது பெயர், பிறந்த தேதி உள்ளிட்ட விவரங்களை தங்கராஜ் பதிவு செய்துள்ளார். சிறிது நேரத்தில் அவருடைய வங்கி கணக்கிலிருந்து ஆறு பரிவர்த்தனைகளில் 7.47 லட்சம் ரூபாய் எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் தனதுவங்கியைதொடர்பு கொண்டு கேட்டபோது தான் இது ஒரு மோசடி என்பது தெரியவந்துள்ளது. பின்னர் அவரது வங்கி கணக்கை வங்கி அதிகாரிகள் பிளாக் செய்துள்ளனர். இதையடுத்து, இது குறித்து திருப்பூர் மாவட்ட சைபர் கிரைம் போலீசில் தங்கராஜ் புகார் அளித்தார். இந்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ராணிப்பேட்டையில் ஜாகுவார் லேண்ட்ரோவர் கார் தொழிற்சாலை சுற்றுச்சூழல் அனுமதி கோரியது

சென்னை, டிச.26

இந்தியாவில் பிரீமியம் வகை கார்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படும் நிலையில், தமிழ்நாட்டிலேயே ஜாகுவார் லேண்ட்ரோவர் காரைடாடாமோட்டார்ஸ் நிறுவனம் உற்பத்தி செய்ய முடிவு செய்துள்ளது. இதற்காக ராணிப்பேட்டையில் இடம் தேர்வு செய்யப்பட்டு 190 ஹெக்டேர்பரப்பளவில்தொழிற்சாலையை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.







இதுதொடர்பாகராணிப்பேட்டையில் உள்ள பணப்பாக்கம் சிப்காட் தொழில்பூங்காலில்டாடா மோட்டார்ஸ் நிறுவனம் 5 ஆண்டுகளில் ரூ.9 ஆயிரம் கோடி முதலீடு மற்றும் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கார் தொழிற்சாலையை அமைக்க ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இப்போது முதல்கட்டமாக ரூ.914 கோடியில் தொழிற்சாலைக்கான கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு ஜாகுவார் லேண்ட்ரோவர் வகை கார்களை உற்பத்தி செய்வதற்கு டாடா மோட்டார்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த ஆலைக்கு செப்டம்பர் 28ந் தேதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டி இருந்தார்.

இதைத் தொடர்ந்து கட்டுமான பணிகளை மேற்கொள்ள சுற்றுச்சூழல் அனுமதி கோரி டாடா மோட்டார்ஸ் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

இந்த ஆலையில் முதல் கட்டமாக 1650 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஜல்லிக்கட்டு போட்டி தமிழக அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு






சென்னை, டிச.26

தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மாநிலம் முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது. மதுரை மாவட்டத்தில் அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரத்திற்கு அடுத்தபடியாக உசிலம்பட்டி அருகே உள்ள தொட்டப்பநாயக்கனூரில் நடைபெறும்ஜல்லிக்கட்டு பிரசித்தி பெற்றது.

இந்நிலையில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

★ மாவட்ட கலெக்டரிடம் அனுமதி பெறாத அமைப்பாளர்களுக்கு ஜல்லிக்கட்டு போட்டி நடத்த அனுமதி வழங்கக் கூடாது.

★ஜல்லிக்கட்டின்போது காளைகளை துன்புறுத்துவதை தவிர்க்க வேண்டும்.

★ஜல்லிக்கட்டு போட்டி நடத்த விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

★ஜல்லிக்கட்டு போட்டி முழுவதும் வீடியோ பதிவு செய்ய வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# எம்.ஜி.ஆரை மோடியுடன் ஒப்பிட முடியாது அண்ணாமலைக்கு ஜெயக்குமார் பதிலடி

சென்னை, டிச.26

அ.தி.மு.க. நிறுவனத்தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான எம்.ஜி.ஆரின் 37வது நினைவு நாளான இன்று சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ளஎம்.ஜி.ஆர். நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்.





இதில் அ.தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் உள்ளிட்ட நிர்வாகிகளும் மரியாதை செலுத்தினர்.

எம்.ஜி.ஆரின் நினைவு தினத்தையொட்டி தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் மோடியை எம்.ஜி.ஆருடன் ஒப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் எம்.ஜி.ஆரை யாருடனும் ஒப்பிட முடியாது என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்காட்டமாகபேசினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

இதை எந்தநிலையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அவருடன் ஒப்பிடவே முடியாது. எம்ஜிஆரையும் மோடியையும் ஒப்பிடுவது மடுவுக்கும் மலைக்கும் உள்ள வித்தியாசம். அனைத்து மதத்தினரையும்சமமாக பார்த்தவர் எம்ஜிஆர். பாஜகவின் கொள்கையே மதத்தால் பிரிவினையை தூண்டுவதுதான். அவருடன் மோடியை ஒப்பிடலாமா? என ஜெயக்குமார் கூறினார்.

# திருச்சியில் 31ந்தேதி அ.தி.முக. கண்டன ஆர்ப்பாட்டம் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, டிச.26

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில்கூறி இருப்பதாவது:

திருச்சி மாநகரின் மையப் பகுதியில் உள்ள மாரீஸ் பாலத்தை அகற்றுவதற்காக, கடந்த மார்ச் மாதம் முதல் அப்பாலத்தின் மீதான போக்குவரத்து நிறுத்தப்பட்டு இன்று வரை அந்தப் பாலம் அகற்றப்படாமல் ஆமை வேகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன.



இதே போல், திருச்சி ஜங்ஷன் அருகில் அமைந்துள்ள மற்றொரு பாலமும் அகற்றப்பட்டுவிட்டது. கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு அனைவரும் 3 முதல் 5 கிலோ மீட்டர் வரை சுற்றிச் செல்லும் சூழ்நிலை உருவாகி உள்ளது. தி.மு.க. அரசைக் கண்டித்தும்; நிர்வாக சீர்கேடுகளுக்குக் காரணமான திருச்சி மாநகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும், அ.தி.மு.க. திருச்சி மாநகர் மாவட்டத்தின் சார்பில், வருகிற 31ந்தேதி (செவ்வாய்க்கிழமை) காலை 10 மணியளவில், சிந்தாமணி அண்ணா சிலை அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஸ்ரீரங்கம் ரங்கராஜன் நரசிம்மனுக்கு நிபந்தனை ஜாமீன்

சென்னை,டிச26

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் உள்ளிட்டோரை அவதூறாக பேசி சமூக வலைத்தளத்தில் ஸ்ரீரங்கத்தைச் சேர்ந்த ரங்கராஜன் நரசிம்மன் என்பவர் வீடியோ வெளியிட்டார்.

இதுகுறித்து ஸ்ரீபெரும்புதூர் ஜீயர் தரப்பில் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்த சென்னை சைபர் கிரைம் போலீசார், ரங்கராஜன் நரசிம்மனை கைது செய்து புழல் சிறையில் அடைத்தனர். பின்னர் பெண் வக்கீலை அவதூறாக பேசியதாக திருவல்லிக்கேணி போலீசார் தொடர்ந்த மற்றொரு வழக்கிலும் ரங்கராஜன் நரசிம்மன் கைது செய்யப்பட்டார்.

இந்த வழக்குகளில் ஜாமீன் கேட்டு சென்னை ஐகோர்ட்டில் அவர் ரங்கராஜன் நரசிம்மன் தரப்பில் மனு தாக்கல் செய்தார். இந்த மனுக்களை அவசர வழக்காக நேற்று விசாரித்த நீதிபதி வி.லட்சுமிநாராயணன், 2 வழக்குகளிலும் மனுதாரரருக்கு நிபந்தனைஜாமீன்வழங்கி உத்தரவிட்டார்.



ஸ்ரீவில்லிப்புத்தூர், தூத்துக்குடி உள்ளிட்ட போலீஸ் நிலையத்தில் பதிவான வழக்குகளுக்கு ஜாமீன்கேட்டுஐகோர்ட்டு மதுரை கிளையை அணுகும்படி மனுதாரருக்கு உத்தரவிடப்பட்டது. மனுதாரர் தரப்பில் ஆஜராக வக்கீல் டி.எஸ். விஜயராகவன், ''வைணவ மரபுபடி குளித்துவிட்டு பூஜை செய்து நெற்றியில் நாமம் போடவேண்டும். அதற்கு அனுமதியில்லாததால், சிறையில் மனுதாரர் குளிக்காமலும், சாப்பிடாமலும், பூஜை செய்யாமலும் உள்ளார். இதற்கும், வீட்டு சாப்பாடு வழங்கவும் அனுமதி வழங்க உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார். இதுகுறித்து சிறை நிர்வாகத்தை அணுகும்படி மனுதாரர் தரப்புக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

# யானையை விரட்ட வீட்டு முன்பு மிளகாய் பொடி கரைசல் துணி கட்டும் வனத்துறையினர்

ஊட்டி, டிச.26

நீலகிரி மாவட்டம் சேரம்பாடி, பிதர்காடு வனச்சரகத்தில் சேரங்கோடு டேன்டீ, சின்கோனா, நர்சரி, படச்சேரி, சேரங்கோடு பஜார், தட்டாம்பாறை, அய்யன் கொல்லி, மூலைக்கடை, சேரம்பாடி டேன்டீ உள்ளிட்ட பகுதிகள் உள்ளன.

இந்த பகுதிகளில் 35க்கும் மேற்பட்ட வீடுகளையும், விளைநிலங்களையும் புல்லட் என்ற ஒற்றை காட்டு யானை சேதப்படுத்தி வருகிறது. அத்துடன் கண்ணில்பட்ட வாகனங்களை தாக்குவது, பொதுமக்களை ஆக்ரோஷமாக துரத்துகிறது. இப்படி குடியிருப்புக்குள் புகுந்து அட்டகாசத்தில் ஈடுபட்டு வரும் ஒற்றை யானையால் மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

புல்லட் யானையை வனத்துறையினர் 75 வனப்பணியாளர்கள் மூலம் 5 குழுக்களாக பிரிந்து டிரோன் கேமரா மூலம் கண்காணிக்கின்றனர். கும்கி யானைகள் உதவியுடனும் அடிக்கடி ரோந்து சென்று யானையின் நடமாட்டத்தை கண்காணித்து வருகிறார்கள். புல்லட் யானை இருக்கும் இடத்தை கண்டறிந்து,



அந்த யானை கும்கி யானைகள் உதவியுடன் அடர்ந்த வனத்திற்குள் விரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

புல்லட் யானையை வனத்துறையினர் மயக்க ஊசி செலுத்தி பிடித்து தெப்பக்காடு போன்ற யானைகள் முகாம்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் கிளன்ராக் வனப்பகுதியிலிருந்து வெளியேறும் புல்லட் யானையை சேரம்பாடி டேன்டீ தோட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளை குறிவைத்து தாக்கி சேதப்படுத்தி வருகிறது.

இதனால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். இந்த நிலையில் பந்தலூர் பகுதியில் கூடுதல் தலைமை வனபாதுகாவலர் நாகநாதன் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது பாதிக்கப்பட்ட இடங்களுக்கு சென்று ஆய்வு நடத்தி பொதுமக்களை சந்தித்து குறைகளை கேட்டார்.

அத்துடன் காட்டு யானைகள் குடியிருப்புக்குள் நுழையாமல் இருக்க மதம் பிடித்த யானைகளின் சாணத்தை கரைத்து வீட்டு முன்பு தெளிக்கவும், மிளகாய் தூளை வேப்ப எண்ணெயில் கலந்து துணிகளில் நனைத்து அதனை வீடுகள் முன்பு கட்டவும் உத்தரவிட்டார்.

இதையடுத்து வனத்துறையினர் சேரம்பாடி டேன்டீ பகுதியில் உள்ள தோட்ட தொழிலாளர்கள் வீடுகள் மற்றும் கடைகள் முன்புள்ள கதவுகளில் மிளகாய் கரைசலில் ஊற வைத்த துணிகளை தோரணங்களாக கட்டி வருகின்றனர்.

அத்துடன் வீட்டின் முன்பு மதம் பிடித்த யானை சாணத்தை கரைத்து தெளிக்கும் பணியையும் மேற்கொண்டு வருகின்றனர்.

மதம்பிடித்த ஆண் யானையின் நடமாட்டம் இருக்கும் பகுதிகளை மற்றொரு ஆண் யானை தவிர்க்கும்.

இதனால் முதுமலை வளர்ப்பு யானைகள் முகாமில் தற்போது மஸ்தில் இருக்கும் யானைகளின் சாணத்தை சேகரித்து பல பகுதிகளில் தெளித்து வருகிறோம். யானை சாணத்தை நெருப்பில் போட்டு புகை உண்டாக்கப்படுகிறது.

வீடுகளின் கதவுகள், ஜன்னல்களில் மிளகாய் தூள் தடவப்பட்ட துணிகளால் தோரணம் கட்டியுள்ளோம். இதனால் அந்த யானை ஊருக்குள் நுழையாமல் இருக்கும் என நம்புகிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

வனத்துறையின் இந்த முயற்சி பலன் கொடுக்குமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.


# மருத்துவக் கழிவுகள் கொட்டப்படுவதை தடுக்க 14 சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு பணி தீவிரம்

கோவை, டிச.26

மருத்துவக் கழிவுகள் கொட்டுதல், சட்டவிரோதமாக விலங்குகள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் கொண்டு செல்வதை தடுத்திட கோவை மாவட்டத்தில் உள்ள 14 சோதனைச் சாவடிகளில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என கலெக்டர் கிராந்திகுமார் பாடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் கிராந்திகுமார் பாடி வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:

கேரளாவில் இருந்து தமிழ்நாட்டின் எல்லைக்குள் பயோ மெடிக்கல் கழிவுகள் கொட்டுதல், சட்டவிரோதமாக விலங்குகள் மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் கொண்டு செல்வதை தடுத்திட கோவை மாவட்டத்தில் உள்ள 14 சோதனைச் சாவடிகளில் மாவட்ட நிர்வாகம் சார்பில் கண்காணிப்பு பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.



இந்த சோதனைச் சாவடிகளில் 24 மணி நேரமும் போக்குவரத்து மற்றும் பயோமெடிக்கல் கழிவுகள் கொட்டப்படுவதை கண்காணித்திடவும், இது போன்ற நிகழ்வுகள் நடைபெறாமல் தடுத்திடவும், சப்கலெக்டர், வருவாய் கோட்டாட்சியர்கள் தங்களது கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள துறை சார்ந்த அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து சுழற்சி முறையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் ஒப்பந்ததாரர்கள், தரகர்கள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் தமிழக எல்லையில் இருந்து விலங்குகள் கொண்டு செல்லும் போது, உரிய மருத்துவரின் சான்று பெற்றும், உரிய வழிமுறைகளைப் பின்பற்றியும் விலங்குகள் வாகனம் மூலம் கொண்டு செல்லப்படுகிறதா? என்பதை கண்காணிக்க சப்கலெக்டர், வருவாய் கோட்டாட்சியர்கள் மற்றும் தாசில்தார்கள் திடீர் தணிக்கை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வெம்பக்கோட்டை அகழாய்வில் சங்கு வளையல் கண்டெடுப்பு

சென்னை, டிச.26

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே உள்ள விஜயகரிசல்குளத்தில் 3ம் கட்ட அகழாய்வு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. அகழாய்வில் இதுவரை 16 குழிகள் தோண்டப்பட்டுள்ளன.

இந்தநிலையில் நேற்று கூடுதலாக தோண்டப்பட்ட குழியில் பியான்ஸ் எனப்படும் மூலப்பொருளால் தயாரிக்கப்பட்ட உருண்டை



வடிவ மணி, மாவு கற்களால் செய்யப்பட்ட நீள் வட்ட வடிவ மணிகள், அலங்கரிக்கப்பட்ட சங்கு வளையல், கண்டெடுக்கப்பட்டன. இதுவரை 2,850க்கும் மேற்பட்ட பழங்கால பொருட்கள் அகழாய்வில் கண்டெடுக்கப்பட்டுள்ளன

இதுகுறித்து அகழாய்வு இயக்குனர் பொன் பாஸ்கர் கூறுகையில், இந்த மணிகள் மற்றும் சங்கு வளையல்களை பெண்கள் அணிகலன்களாக பயன்படுத்தியுள்ளனர். முதல் இரண்டு கட்டங்களைவிட 3ம் கட்ட அகழாய்வில் தொடர்ந்து கல் மணிகள் அதிகளவு கிடைத்து வருகின்றன என்றார்.

# பாலாற்றில் கழிவுநீர் கலந்து நுரை பொங்கியபடி சென்ற தண்ணீர்: மக்கள் அதிர்ச்சி

சென்னை, டிச.26

தமிழகஆந்திரா எல்லையில் உள்ள நீர்பிடிப்பு பகுதிகளில் புயல் காரணமாக சிலதினங்களாககனமழை பெய்து வந்தது. இதனால் நீர்வரத்து அதிகரித்து பாலாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனைபயன்படுத்தி தோல் தொழிற்சாலைகள் கழிவுநீரை சுத்திகரிக்காமல் அப்படியே பாலாற்றில் திறந்து விடுகின்றனர். இதனால் மாராபட்டு பாலாற்றில் நேற்று மழைநீருடன் கழிவுநீர் கலந்து நுரை பொங்கியபடிதண்ணீர்சென்றது.



இதனை கண்ட பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து தகவலறிந்து வந்த மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் பாலாற்று தண்ணீரின் தரத்தை சோதித்தனர். இதில் தண்ணீர் கால்நடைகள் கூட குடிக்க முடியாத சூழ்நிலை இருப்பது தெரியவந்தது. சுத்திகரிக்கப்படாத தோல் கழிவு நீரை பாலாற்றில் கலப்பதால் நிலத்தடி நீர் மாசு ஏற்படுவதுடன் பாலாற்றில் செல்லும் தண்ணீரை குடித்து கால்நடைகள் பாதிப்படைய வாய்ப்பு உள்ளது.

எனவே பாலாறு மாசு ஏற்படுவதை தடுக்க பாலாற்றில் தோல் கழிவு நீரை திறந்துவிடும் நிறுவனங்கள் மீது மாவட்ட நிர்வாகம் மற்றும் மாசுகட்டுப்பாட்டு வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# இலவச வீட்டுமனை பட்டா வழங்காததால் அரசு நிலத்தில் குடியேற முயன்ற பொதுமக்கள்

சத்தியமங்கலம், டிச.26

ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அருகே தொப்பம்பாளையம், அண்ணாநகர், குரும்பபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வசித்து வருகின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் விவசாயக் கூலித்தொழிலாளர்களாக உள்ளனர். இலவச வீட்டுமனை பட்டா கேட்டு சத்தியமங்கலம் தாசில்தார் அலுவலகத்தில் ஏற்கனவே பல முறை மனு அளித்திருந்தனர்.

ஆனால் பல ஆண்டுகளாகியும் பட்டா வழங்காததால் அப்பகுதி மக்கள் ஆத்திரத்தில் இருந்தனர். இந்நிலையில் அப்பகுதியை சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் தொப்பம்பாளையம், கணபதி நகர் அருகே அரசு புறம்போக்கு



நிலத்தில்குடிசைஅமைக்க பொருட்களுடன் நேற்று திரண்டு வந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்து பவானிசாகர் போலீசார் சென்று கிராம மக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

ஆனால் சமாதானம் அடையாமல் தங்களுக்கு பிடித்த இடத்தை பிடித்து குச்சிகளை நடும் பணியில் பொதுமக்கள் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதைத்தொடர்ந்து சத்தியமங்கலம் டி.எஸ்.பி சரவணன், சத்தியமங்கலம் தாசில்தார் சக்திவேல் நேரடியாக சம்பவ இடத்திற்கு வந்து பொதுமக்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

அப்போது பொதுமக்கள் கூறும்போது, வருமானத்தில் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அரசு வழங்கும் இலவச வீட்டுமனை பட்டா கேட்டு விண்ணப்பித்து இருந்தோம்.

சத்தியமங்கலம் தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று எப்போது கேட்டாலும் இடம் பார்த்துக் கொண்டே இருக்கிறோம் என்று கூறி அனுப்பிவிடுகின்றனர். உடனடியாக எங்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என்றனர்.

விண்ணப்பள்ளி பஞ்சாயத்துக்குட்பட்ட குரும்பாளையத்தில் அரசுக்கு சொந்தமான நத்தம் நிலத்தை அளவீடு செய்து, தகுதியானவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தாசில்தார் உறுதி அளிக்கவே பொதுமக்கள் அதனை ஏற்று அங்கிருந்து கலைந்து சென்றனர். இதனால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# எட்டயபுரம்: கார் மீது வாகனம் மோதி விபத்து: 3 பேர் பலி

தூத்துக்குடி, டிச.26

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அய்யன் தோட்டத்தைச் சேர்ந்தவர் செல்வராஜ் (38). இவரது நண்பர்கள் திருப்பூர் மாவட்டம் அய்யம்பாளையத்தைச் சேர்ந்த விஜயகுமார் (38), அலங்கியத்தைச் சேர்ந்த விக்னேஷ் (31), பழனி அருகே ஆண்டி நாயக்கர் வலசுவை சேர்ந்த மகேஷ் குமார் (35), பழனி அருகே ராசுகாட்டுத்தோட்டத்தைச்சேர்ந்த ராஜ்குமார் (35). இவர்கள் 5 பேரும் முருகன் கோவிலுக்கு மாலை அணிந்து விரதம் இருந்து வந்தனர்.

இந்தநிலையில், இவர்கள் கடந்த 2 நாட்களுக்கு முன்பு அறுபடை கோவில்களுக்கு சென்று சாமி தரிசனம் செய்வதற்காக காரில் புறப்பட்டனர். நேற்று காலை சுவாமிமலைக்கு சென்ற அவர்கள், அங்கு தரிசனம் முடித்துவிட்டு தஞ்சாவூர் பெரிய கோவிலுக்கு சென்றுள்ளனர். பின்னர் தஞ்சாவூரில் இருந்து திருச்செந்தூருக்கு புறப்பட்டு வந்து கொண்டிருந்தனர். அப்போது காரை செல்வராஜ் ஓட்டி வந்ததாக கூறப்படுகிறது. இன்று அதிகாலை ஒரு மணிக்கு மதுரை தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் மேலக்கரந்தை அருகே வந்தபோது, செல்வராஜிக்கு தூக்கம் வரவே, அவர் காரை சாலையோரம் நிறுத்திவிட்டு தண்ணீர் அருந்தி கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது.

அப்போது பின்னால் வேகமாக வந்த அடையாளம் தெரியாத வாகனம் திடீரென கார் மீது மோதிவிட்டு நிற்காமல் சென்றது. இதில் கார் தூக்கி வீசப்பட்டு சாலையோர பள்ளத்தில் விழுந்து அப்பளம் போல் நொறுங்கியது. இந்த விபத்தில் செல்வராஜ், விஜயகுமார், விக்னேஷ் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த மகேஷ் குமார், ராஜ்குமார் ஆகியோர் சிகிச்சைக்காக எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து எட்டயபுரம் போலீசார் வழக்குப்பதிவு செய்து, அப்பகுதியில் உள்ள சிசிடிவி கண்காணிப்பு கேமரா பதிவுகளை கொண்டு அடையாளம் தெரியாத வாகனத்தை தேடி வருகின்றனர்.

# ரெயில் பயண சலுகையை விட்டுக்கொடுத்த 63 லட்சம் பேர் எந்த நாட்டை சார்ந்தவர்கள்? சு.வெங்கடேசன்

மதுரை, டிச.26

மதுரை பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

நான் பாராளுமன்றத்தில் 2021 2024 மற்றும் 2025 நிதியாண்டின் அக்டோபர் வரையிலான காலகட்டத்தில் எத்தனை முறை மூத்த குடிமக்கள் ரயிலில் பயணம் செய்துள்ளார்கள், மூத்த குடிமக்களுக்கான ரெயில் கட்டண சலுகையை திரும்ப பெற்றதன் மூலம் இதே காலகட்டத்தில் ஒன்றிய அரசுக்கு எவ்வளவு தொகை சேமிப்பாக கிடைத்துள்ளது என்ற கேள்வியை (231/13.12.2024) எழுப்பி இருந்தேன். அதற்கு ரெயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதிலளித்துள்ளார்.

அந்த பதிலில் மூத்த குடிமக்கள் எத்தனை முறை பயணம் செய்துள்ளார்கள் என்ற விவரம் தரப்படவில்லை. மாறாக 2021 நிதியாண்டில் துவங்கி 2024 அக்டோபர் வரை மொத்த பயணிகள் 2230 கோடி முறை பயணித்துள்




ளனர் என்று பதில் அளித்துள்ளார். 2022 23 ஆம் ஆண்டில் பயணிகளின் கட்டண சலுகையாக 57 ஆயிரம் கோடி ரூபாய் தரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். இது சராசரியாக ரெயில்வே கட்டணத்தில் 46 சதவீதம் என்றும் தெரிவித்துள்ளார்.

கேள்வியின் நோக்கமே மூத்த குடிமக்கள் செய்கிற ரெயில் பயணங்களின் விவரங்களை பெறுவதும், கோவிட் காரணத்தை பயன்படுத்தி திரும்ப பெறப்பட்ட மூத்த குடிமக்களின் ரெயில் கட்டண சலுகைகளின் காரணமாக எவ்வளவு தொகை அரசுக்கு மிச்சமாகி இருக்கிறது என்பதை அறிவதற்கு தான்.

ஆனால் அமைச்சரோ வேண்டுமென்றே அந்தக் கேள்விக்கு பதில் அளிக்காமல் மொத்த பயணிகள் எவ்வளவு, மொத்த மானியம் எவ்வளவு என்று கணக்குத் தந்துள்ளார். எல்லோருக்குமான மானியத்தைக் கடந்துதான் மூத்த குடிமக்களுக்கு சிறப்பு கட்டண சலுகை வழங்கப்பட்டு வந்தது. ஆகவே அரசு இந்த கேள்விக்கான பதிலை தவிர்ப்பதன் மூலம் மூத்த குடிமக்களின் கட்டணச் சலுகை ரத்தானதால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு எவ்வளவு என்கிற தகவலை மறைத்துள்ளது.

சீப்பை ஒளித்து வைத்து கல்யாணத்தை நிறுத்த முடியாது; மூத்த குடிமக்கள் சம்பந்தமான தகவலை மறைப்பதன் மூலம் அவர்களின் கோபத்தையும் வடித்து விட முடியாது.

அதே நேரம், இம்மாதம் வெளிவந்துள்ள ஒன்றிய அரசின் "நியூ இந்தியா சமாச்சார்" இதழில் மூத்த குடிமக்கள் 63 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தாங்களாகவே முன் வந்து ரெயில் பயண சலுகையை விட்டுக்கொடுத்துள்ளனர் என்று கூறியுள்ளனர்.

மூத்த குடிமக்கள் எத்தனை முறை பயணம் செய்தனர் என்பதையே தர மறுக்கிற ரெயில்வே அமைச்சகம் பயணச்சலுகையை திருப்பித் தந்தவர்களின் விபரத்தை எங்கிருந்து எடுத்தது?

அதுமட்டுமல்ல, பறிக்கப்பட்டதை எப்படி விட்டுக்கொடுக்க முடியும்? இந்த 63 லட்சம் பேர் எந்த நாட்டை சேர்ந்தவர்கள் என்ற விபரத்தை தெரிவிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# அண்ணா பல்கலை. வளாகத்தில் மாணவிக்கு பாலியல் தொல்லை

சென்னை, டிச.26

சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்தில் படித்து வரும் ஒரு மாணவரும், மாணவியும் காதலித்து வருவதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்றிரவு, உணவு அருந்திய பிறகு தான் காதலிக்கும் 4ம் ஆண்டு மாணவர் உடன் கல்லூரி வளாகத்தில் பேசிக்கொண்டிருந்த போது, அங்கு அடையாளம் தெரியாத 2 பேர் வந்து மாணவரை தாக்கியுள்ளனர். மாணவரை அடித்து துரத்திவிட்டு, மாணவியை பாலியல் ரீதியாக துன்புறுத்தி உள்ளனர்.

இது குறித்து அந்த மாணவி கோட்டூர்புரம் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இந்த புகாரையடுத்து கோட்டூர்புரம் உதவி ஆணையர் பாரதிராஜன் தலைமையிலான போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாணவியிடம் அத்துமீறியவர்கள் பல்கலை. மாணவர்களா? அல்லது வெளியில் இருந்து வந்தவர்களா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்பாக சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் ஒருவரை பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் 20 பேரிடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் பணியில் இருந்த காவலாளிகள், கட்டுமான பணியில் இருந்த தொழிலாளர்கள், விடுதிக்கு தண்ணீர் கேன் சப்ளை செய்பவர்கள், காய்கறி, மளிகை பொருட்கள் சப்ளை செய்பவர்கள் என விவரங்களை போலீசார் சேகரித்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மாணவியிடம் முதற்கட்ட விசாரணை நடத்தி முடிக்கப்பட்ட நிலையில், அவருக்கு மன ரீதியான கவுன்சிலிங் வழங்கப்பட்டு வருகிறது. மாணவியின் காதலனிடம் நடத்தப்பட்ட விசாரணையும் நிறைவு பெற்றுள்ளது. மேலும் இந்த வழக்கின் குற்றவாளிகளை பிடிக்க மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. கவுன்சிலிங் முடிந்து சிறிது ஓய்வுக்கு பின் மாணவி மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்லப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்திற்கு அரசியல் கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# வருண் தவானுக்கு தமிழ் சொல்லி கொடுத்த நடிகை கீர்த்தி சுரேஷ்



கடந்த 2016ம் ஆண்டு விஜய் நடிப்பில் அட்லி இயக்கத்தில் உருவான திரைப்படம் 'தெறி'. இந்த படம் மிகப்பெரிய வெற்றி பெற்ற நிலையில் இந்த படம் இந்தியில் 'பேபி ஜான்' என்ற பெயரில் உருவாகியுள்ளது. இப்படத்தை அட்லியின் மனைவி பிரியாவின் ஏ பார் ஆப்பிள் ஸ்டுடியோஸ், ஜியோ ஸ்டுடியோஸ் மற்றும் முராத் கெதானியின் சினி1 ஸ்டுடியோஸ் ஆகியவை இணைந்து தயாரித்துள்ளன.

அட்லியின் உதவி இயக்குனர் காலிஸ் என்பவர் இயக்கியுள்ள இந்த படத்தில் விஜய் நடித்த வேடத்தில் பிரபல பாலிவுட் நடிகர் வருண் தவான் நடித்துள்ளார். இந்த படத்தின் நாயகிகளாக கீர்த்தி சுரேஷ் மற்றும் வாமிகாகபி ஆகியோர் நடித்துள்ளனர். இசையமைப்பாளர் தமன் இந்தப் படத்துக்கு இசையமைத்துள்ளார்.

சமீபத்தில் இந்த படத்தின் டீசர் மற்றும் டிரெய்லர் வெளியாகி வைரலாகின. இப்படம் கிறிஸ்துமஸ் விடுமுறையை முன்னிட்டு நாளை வெளியாக உள்ளது.

இந்நிலையில் கீர்த்தி சுரேஷ் வருண் தவானுக்கு தமிழ் , மலையாளம் மற்றும் தெலுங்கு மொழியில் நான் உங்களை நேசிக்கிறேன் என்ற சொல்லை மூன்று மொழிகளிலும் பேச கற்றுக் கொடுக்கும் வீடியோ தற்பொழுது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# இயக்குனர் சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவை பற்றிய ஆவணப்படத்தின் 3வது எபிசோட் வெளியீடு




கமல்ஹாசனின் ஆரம்பகாலத்தில் கே.பாலச்சந்தர் தான் அவரது குருவாக இருந்தார். அவரது வரிசையில் கமலின் கேரியரில் மிகப் பெரிய மாற்றம் கொடுத்தவர் இயக்குநர் சிங்கீதம் சீனிவாசராவ். இவர் தமிழ் மட்டுமின்றி தெலுங்கிலும் பல படங்களை இயக்கியுள்ளார். ராஜபார்வை, பேசும் படம், அபூர்வ சகோதரர்கள், மும்பை எக்ஸ்பிரஸ் ஆகியவை சிங்கீதம் இயக்கத்தில் கமல் நடித்த படங்களாகும்.

கமலின் 'பேசும் படம்' உட்பட பல பேசப்பட்ட படங்களை இயக்கியவர் சிங்கீதம் சீனிவாசராவ். இவரை கௌரவிக்கும் பொருட்டு கமலின் ராஜ்கமல் நிறுவனம் சார்பில் 'அபூர்வ சிங்கீதம்' என்ற பெயரில் கடந்த மார்ச் மாதம் விழா எடுத்து கௌரவித்தார் கமல்.

நடிகர் கமல்ஹாசன் தற்பொழுது இயக்குனர் இமயமான சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவை கவுரவிக்கும் வகையில் அவர் இந்தியசினிமாவிற்காகசெய்தபங்களிப்பைபோற்றும்வகையில்அவரைபற்றிஆவணப்படம்ஒன்றைஉருவாக்கியுள்ளார்.

சிங்கிதம் ஸ்ரீனிவாசன் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளில் பல திரைப்படங்களை இயக்கியுள்ளார். இவர் இயக்கிய அபூர்வ சகோதரர்கள் மற்றும் மாயா பசார் ஆகிய திரைப்படங்கள் சினிமா உலகின் வரலாற்றில் இடம் பெற்ற திரைப்படங்களாகும்.

இந்நிலையில் இயக்குநர் சிங்கீதம் சீனிவாசராவ் பற்றிய அபூர்வ சிங்கீதம் ஆவணப்படத்தின் 2வது எபிசோடை ராஜ்கமல் பிலிம் இண்டர்நேஷனல் தற்பொழுது வெளியிட்டுள்ளது. ஆவணப்படத்தின் 3வது எபிசோடு ராஜ்கமல் பிலிம்ஸ் யூடியூப் சேனலில் வெளியாகியுள்ளது.

# 'சிக்கந்தர்' படப்பிடிப்பை நிறைவு செய்த காஜல் அகர்வால்?

வெங்கட் பிரபு இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளியான "தி கோட்" திரைப்படம் மாபெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து நடிகர் விஜய் நடிக்கும் படத்திற்கு தற்காலிகமாக 'தளபதி 69' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் பிரகாஷ் ராஜ், பிரியாமணி, கவுதம் வாசுதேவ் மேனன், பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, நரேன் ஆகியோர் நடிக்க உள்ளனர்.



இந்தப் படம் விஜய் நடிக்கும் கடைசி படம் என கூறி வருகின்றனர். இப்படத்தை எச்.வினோத் இயக்கி வருகிறார். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இப்படம் அடுத்தாண்டு அக்டோபர் மாதம் வெளியாகவுள்ளது. பிரபல தயாரிப்பு நிறுவனமான கே.வி.என் நிறுவனம் இப்படத்தை தயாரிக்கிறது. 'அனிமல் மற்றும் கங்குவா' படத்தில் வில்லனாக நடித்து அசத்திய பாபி தியோல் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். 'தளபதி 69' படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு சென்னையில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்த படமானது அரசியல் தொடர்பான கிரைம் திரில்லர் கதைக்களத்தில் உருவாகி வருவதாகவும் கூறப்படுகிறது. இந்த நிலையில் தற்போது தளபதி 69 படத்தின் பர்ஸ்ட் லுக் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது. அதன்படி, வருகின்ற புத்தாண்டு பண்டிகையை முன்னிட்டு ஜனவரி 1ந் தேதி தளபதி 69 படத்தின் பர்ஸ்ட் லுக் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த பர்ஸ்ட் லுக் போஸ்டருடன் படத்தின் தலைப்பும் வெளிவர வாய்ப்பு உள்ளது. விரைவில் இப்படம் குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# புரோ கபடி லீக்: பெங்கால் வாரியர்ஸ் அணியை வீழ்த்தி யு மும்பா வெற்றி

12 அணிகள் இடையிலான 11வது புரோ கபடி லீக் போட்டி கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்திலும் 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவிலும் நடைபெற்று முடிந்தன. இந்த தொடரின் 3வது கட்ட லீக் ஆட்டங்கள் தற்போது புனேவில் நடைபெற்று வருகிறது.

இந்த தொடரில் இன்று இரவு 9 மணிக்கு தொடங்கிய ஆட்டத்தில் பெங்கால் வாரியர்ஸ் யு மும்பா அணிகள் மோதின.

இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் அபாரமாக விளையாடி யு மும்பா அணி ஆதிக்கம் செலுத்தியது. இதனால் ஆட்ட நேர முடிவில்36 27 என்ற புள்ளிகள் கணக்கில் யு மும்பா அணி வெற்றி பெற்றது.

# சாம்பியன்ஸ் டிராபி அரையிறுதிக்கு செல்வது யார்...? பகர் ஜாமன் கணிப்பு



ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபிக்கான போட்டிகள் பாகிஸ்தான் மற்றும் துபாய் நாடுகளில் நடைபெற உள்ளன. 50 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக இவை நடத்தப்படும். இவற்றில் 8 அணிகள் பங்கேற்கும். பரம எதிரிகளான இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகள் இடையேயான போட்டி துபாயில் பிப்ரவரி 23ந்தேதி நடைபெறும்.

இந்நிலையில், ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபிக்கான அரையிறுதிக்கு முன்னேறும் அணிகள் பற்றி பாகிஸ்தானை சேர்ந்த கிரிக்கெட் வீரர் பகர் ஜமான் தன்னுடைய கணிப்புகளை வெளியிட்டு உள்ளார். பேட்ஸ்மேனான இவர், 2025ம் ஆண்டு நடைபெறவுள்ள ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி அரையிறுதி போட்டிகளுக்கான வரிசையில் நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா உள்ளிட்ட அணிகள் உள்ள நிலையில், இறுதி 4 அணிகளுக்கான வரிசையில் ஆசிய நாடுகளே இடம்பெறும் என அவர் கணித்திருக்கிறார்.

இதன்படி, பாகிஸ்தான், இந்தியா, மற்றும் தென்ஆப்பிரிக்கா ஆகிய 4 அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும் என நம்புகிறேன் என யூடியூப் சேனல் ஒன்றில் அவர் கூறியுள்ளார்.

# எனது மகளை கிரிக்கெட் வீராங்கனையாக்கி இருக்க வேண்டும்... மனு பாக்கரின் தந்தை வேதனை



பாரீஸ் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் இந்தியா சார்பில் பங்கேற்று 2 வெண்கல பதக்கங்களை வென்றவர் மனு பாக்கர். இந்நிலையில், விளையாட்டு துறையில் சிறந்த வீரர், வீராங்கனைக்கு அளிக்கப்படும் கேல் ரத்னா விருதுக்கான 30 பேர் கொண்ட பட்டியலில் மனுவின் பெயர் இடம் பெறவில்லை. இதனால் வருத்தமடைந்த மனு, அவருடைய தந்தையிடம் விரக்தியில் பேசியுள்ளார்.

இதுபற்றி மனுவின் தந்தை கூறும்போது, துப்பாக்கி சுடுதலில் மனுவை பயிற்சி பெற வைத்ததற்காக நான் வருந்துகிறேன். அவரை கிரிக்கெட் வீராங்கனையாக்கி இருக்க வேண்டும். அதன்பின்னர், எல்லா விருதுகளும் பாராட்டுகளும் மனுவை தேடி வந்திருக்கும். ஒலிம்பிக்கில் 2 பதக்கங்களை மனு வென்று கொடுத்திருக்கிறார். வேறு ஒருவரும் இதுபோன்று இதற்கு முன்பு செய்தது இல்லை. நாட்டுக்காக எனது மகள் இன்னும் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? என வேதனையுடன் கேட்டுள்ளார். மனுவின் முயற்சிகளை அரசு அங்கீகரித்தேயாக வேண்டும். மனுவிடம் நான் பேசினேன். அவர் மனமுடைந்து போயிருக்கிறார். அவர், நான் ஒலிம்பிக்கிற்கு போயிருக்க கூடாது. நாட்டுக்காக பதக்கங்களை வென்றிருக்க கூடாது என மனு என்னிடம் கூறினார் என்று மனுவின் தந்தை வருத்தத்துடன் கூறியுள்ளார். கேல் ரத்னா விருதுக்காக ஆன்லைன் வழியே மனு, விண்ணப்பித்து இருக்கிறார் என தகவல் தெரிவிக்கின்றது. ஆனால், அவருடைய பெயர் விருது பட்டியலில் காணப்படவில்லை என கூறப்படுகிறது. இதனால், அவர் அதிருப்தி அடைந்துள்ளார். நாட்டின் 3வது மற்றும் 4வது உயரிய விருதுகளான பத்ம பூஷண் மற்றும் பத்ம ஸ்ரீ விருதுகளுக்கும் மனு விண்ணப்பித்து உள்ளார் என தகவல் தெரிவிக்கின்றது.

# புரோ கபடி லீக்: பிளே ஆப் சுற்றுக்கு தகுதி பெற்ற அணிகள் விவரம்

12 அணிகள் இடையிலான 11வது புரோ கபடி லீக் போட்டி கடந்த அக்டோபர் 18ம் தேதி ஐதராபாத்தில் தொடங்கியது. இந்த தொடரின் முதற்கட்ட லீக் ஆட்டங்கள் ஐதராபாத்திலும், 2வது கட்ட லீக் ஆட்டங்கள் நொய்டாவிலும், 3வது கட்ட லீக் ஆட்டங்கள் புனேவிலும் நடைபெற்றன. கடந்த 2 மாதங்களாக நடைபெற்று வந்த இந்த தொடரின் லீக் ஆட்டங்கள் நேற்றுடன் முடிந்தன. இந்த லீக் ஆட்டங்களின் முடிவில் 6 அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறின. அதன்படி புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடித்த அரியானா ஸ்டீலர்ஸ் மற்றும் தபாங் டெல்லி அணிகள் நேரடியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றன. புள்ளிப்பட்டியலில் 3 முதல் 6 இடங்களை பிடித்த உ.பி.யோத்தாஸ், பாட்னா பைரேட்ஸ், யு மும்பா, ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ் அணிகள் நாக் அவுட் சுற்றுக்கு முன்னேறின. புனேவில் நாளை நடைபெறும் நாக் அவுட் சுற்று ஆட்டங்களில் உ.பி.யோத்தாஸ் ஜெய்ப்பூர் பிங்க் பாந்தர்ஸ், பாட்னா பைரேட்ஸ் யு மும்பா அணிகள் மோத உள்ளன. இதில் வெற்றி பெறும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். புள்ளிப்பட்டியலில் 7 முதல் 12 இடங்களை பிடித்த தெலுங்கு டைட்டன்ஸ், புனேரி பால்டன், தமிழ் தலைவாஸ், பெங்கால் வாரியர்ஸ், குஜராத் ஜெயண்ட்ஸ், பெங்களூரு புல்ஸ் அணிகள் தொடரில் இருந்து வெளியேறின.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.